CPA

Centre for Policy Alternatives
විකල්ප ප්‍රතිපත්ති කේන්ද්‍රය
மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

# முல்லைத்தீவு மாவட்டத்தில் அண்மையில் நடந்த நிகழ்வுகள் மீது கவனம் செலுத்துவதற்கு உடனடி நடவடிக்கையை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் கோருகிறது

***செப்டெம்பர் 30, 2019, கொழும்பு, இலங்கை:***

இலங்கையில் போருக்குப் பின்னதாக ஒரு புவியல் சார்ந்த முரண்பாடுகளைக் காட்டி நிற்கின்ற, நீராவியடிப் பிள்ளையார் கோவில் மற்றும் முல்லைத்தீவு குருகந்த புராண ரஜமஹா விகாரை என்பவற்றுக்கிடையில் சர்ச்சைக்குரிய நிலம் தொடர்பாக முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெற்ற அண்மைய நிகழ்வுகளால் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் ஆழ்ந்த கரிசனத்திற்குள்ளாகிறது. இச்சம்பவம், இராணுவ மயப்படுத்தலுக்கு சட்டத்தினாட்சியை கீழ்படிய வைப்பதிலிருந்து, இன-மத பதற்றங்களுக்கு பலியாகும் நிலவுரிமைக் கோரல்கள் வரையான பல்வகைப் பிரச்சினைகளை பேசுவதுடன், தேசியவாத சக்திகளால் கடுமையான நெருக்கடிக்குள்ளாகும் சமாதானத்தின் பலவீனத்தையும் சுட்டிக்காட்டுகின்றது. இலங்கையில் சட்டவாட்சி மற்றும் சமாதானத்திற்கு அதன் தாக்கங்களைக் கவனத்தில் கொண்டு, ஒரு நீதிமன்ற கட்டளையை மீறி செயற்பட்ட அனைவரையும் வகைப்பொறுப்புக் கொண்டவர்களாக்குவதற்கு தேவையான அனைத்து அவசியமான நடவடிக்கைகளையும் எடுப்பதற்கு சம்பந்தப்பட்ட நிறுவனங்களை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் வலியுறுத்துகிறது. அவ்வாறே, இம்மீறலுக்கு ஆதரவளித்த மற்றும்/ அல்லது உடந்தையாக இருந்த ஏனையவர்களும் வகைப் பொறுப்புக் கொண்டவர்களாக சட்டத்தின் முன் நிறுத்தப்படல் வேண்டும்.

ஊடக அறிக்கைகளின் படி, நீராவியடிப் பிள்ளையார் கோவிலுக்குச் சொந்தமானது எனக் கோரப்படும் காணியில் வசித்த முல்லைத்தீவு குருகந்த புராண ரஜமஹா விகாராதிபதி கொலம்ப மெத்தாலங்கராகீர்த்தி தேரரை தகனம் செய்வதற்கு மேற்கொண்ட முயற்சிகளின் போது சம்பவம் நிகழ்ந்துள்ளது. உள்ளூர்வாசிகள் மற்றும் கோவில் பரிபாலன சபையினர் இதற்கு ஆட்சேபம் தெரிவித்ததுடன், விடயம் முல்லைத்தீவு நீதிமன்றத்திற்கு பாரப்படுத்தப்பட்டு, குறித்த காணியில் தகனம் செய்வதை தடுத்து நீதிமன்றம் ஒரு கட்டளையைப் பிறப்பித்தது. நீதிமன்றக் கட்டளை பிறப்பிக்கப்பட்டிருந்த போதிலும் அதனை நேரடியாக மீறும் வகையில், கோவிலுக்குச் சொந்தமானதாகக் கோரப்படும் காணியில் செப்டெம்பர் 23, 2019 அன்று தகனம் நடைபெற்றதுடன் கலகொட அத்தே ஞானசார தேரர் மற்றும் ஏனைய பௌத்த துறவிகளும் தகனத்தை முன்னின்று நடத்தியதை காணொளிக் காட்சி காண்பித்தது. நீதிமன்றக் கட்டளையின் மீறுதல் மற்றும் சட்டத்தரணி மீதான தாக்குதல் என்பவற்றைத் தடுக்கத் தவறிய பொலிஸ் மற்றும் இராணுவம் பௌத்த குருமாரின் நடவடிக்கைகளுக்கு மௌனமாக ஆதரவு வழங்கியதையும் கூட அறிக்கைகள் சுட்டிக் காட்டின.

ஞானசார தேரர் கலவரங்களைத் தூண்டிவிடுகின்ற ஒரு வரலாற்றைக் கொண்டுள்ளதுடன் பல்வேறு நீதிமன்றங்களால் ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் அழைக்கப்பட்ட ஒருவராவர். ஞானசார தேரர் ஹோமாகம நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு இடையூறு செய்தமைக்கும் மற்றும் நீதிச் சேவை உத்தியோகத்தர்கள் மற்றும் சாட்சிகளை அச்சுறுத்தியமைக்குமாக ஆகஸ்ட் 2018 இல் மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் குற்றவாளியாகத் தீர்ப்பளிக்கப்பட்ட ஒருவராவர்.

Centre for Policy Alternatives (Guarantee) Limited | 6/5, Layards Road, Colombo 5, Sri Lanka Tel: +94112081384, +94112081385, +94112081386 | Fax: +9411 2081388 | Email: info@cpalanka.org | Web: www.cpalanka.org

எவ்வாறாயினும் மே, 2019 இல் அவருக்கு ஜனாதிபதியினால் பொது மன்னிப்பு வழங்கப்பட்டது. இந்த மன்னிப்பின் அரசியலமைப்புத்தன்மையை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தற்போது நீதிமன்றத்தில் சவாலுக்கு உட்படுத்தியுள்ளது. தற்போதைய சம்பவம், சட்டம் மற்றும் நீதிமன்றங்கள் மற்றும் நீதிச் சேவை உத்தியோகத்தர்களை முற்றிலுமாக அவமதிக்கும் ஞானசார தேரரின் ஒரு தொடர்ச்சியான நடவடிக்கைகளிலான சமீபத்தைய ஒரு நிகழ்வாகும். சட்டமா அதிபர் திணைக்களம், பொலிஸ் மற்றும் நீதிச்சேவை என்பன ஞானசார தேரர் மற்றும் நீதிமன்றக் கட்டளையை மீறுவதில் சம்பந்தப்பட்ட ஏனைய அனைத்து நபர்களையும் சட்டத்தின் முன் நிறுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பது முக்கியமானதாகும்.

மேலும், தற்போதைய சம்பவம், இலங்கையில் போருக்குப் பிந்திய நிலையில் இராணுவமயப்படுத்துதல், நில ஆட்கொள்ளல், நில ஆக்கிரமிப்புக் கோரல்கள் மற்றும் இன ரீதியாக மக்கள் தொகைப் பரம்பலை மாற்றுதல் தொடர்பான குற்றச்சாட்டுகள் என்பவற்றின் பின்னணியில் நிகழ்ந்துள்ளது. நிலப் பிரச்சினைகளின் சச்சரவு மற்றும் நல்லிணக்கத்திற்கான அதன் தாக்கம் மற்றும் அவற்றின் சிக்கலான தன்மை பற்றி இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் சுட்டிக்காட்டி வந்துள்ளது. 2015 இலிருந்து சில மட்டுப்படுத்தப்பட்ட நன்மைகளைத் தவிர, வடக்கு மற்றும் கிழக்கில் நிலப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அரசியலமைப்பு ரீதியான கட்டமைப்பை முழுமையாக அமுல்படுத்துதல் மற்றும் வெளிப்படையானதும் மற்றும் உள்ளிணைந்த அரசாங்கத் திட்டத்தை உருவாக்குதல் என்பவற்றில் தொடர்ச்சியான சவால்கள் அங்கிருந்தன. மேலும் தாமதிக்காது, இந்தப் பிரச்சினை மீது மீளவும் கவனம் செலுத்துவதற்கு அதிகாரங்கள், அரசியல் தலைவர்கள், இராணுவம் மற்றும் அக்கறை கொண்டவர்களுக்கான அழைப்பை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் வலியுறுத்துகிறது.

தசாப்த காலங்கள் வயதானதும் மற்றும் அரசாங்கத்தின் போருக்குப் பிந்திய கொள்கை மற்றும் முரண்பாடுகள் என்பவற்றால் மேலும் சிக்கலாகியுள்ள இந்தப் பிரச்சினைகளுக்கு துரிதமான தீர்த்து வைத்தல்கள் கிடையாது. உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களின் பின் உருவாக்கப்பட்டுள்ள நிச்சயமற்ற தன்மை, அது ஏற்படுத்தியுள்ள இன வன்முறை மற்றும் இந்த வருடம் நவம்பர் மாதத்தில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் என்பவற்றால் இவை மேலும் சிக்கலாகியுள்ளது. இது ஒரு அதிகரித்த அரசியல், மத மற்றும் இனக் கூருணர்வுகளுடன் கூடிய ஒரு சூழ்நிலையிலுள்ளது என்பதுடன் அதிகாரத்திலுள்ளவர்கள் சட்டவாட்சியை மீளமுல்படுத்துவதற்கும் மற்றும் குற்ற விலக்களிப்புக் கலாசாரத்தை முடிவுறுத்துவதற்கும் தீர்மானமிக்க நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். இத்தருணத்தில், நடவடிக்கை எடுக்காமை மனிதத்தன்மையற்ற நடத்தையை அங்கீகரிப்பதாக இருப்பது மட்டுமன்றி குற்ற விலக்களிப்புக் கலாசாரத்தை ஊக்குவிப்பதாகவும் அமைகிறது. அது எதிர்கால முரண்பாடுகளுக்கான விதைகளை விதைப்பதுடன் இலங்கையில் இனத்துவ உறவுகளை மேலும் இடர்பாடுகளுக்கும் உட்படுத்தும்.